# Prime Minister's meeting with the President of Guyana on the sidelines of 17th Pravasi Bhartiya Divas

January 09, 2023

## 17-வது வெளிநாடு வாழ் இந்தியர்கள் தின மாநாட்டிற்கிடையே கயானா அதிபருடனான பிரதமரின் சந்திப்பு

**ஜனவரி 09, 2023**

17-வது வெளிநாடு வாழ் இந்தியர்கள் தின மாநாட்டிற்கிடையே இந்தூரில் இன்று கயானா அதிபர் டாக்டர் முகமது இர்ஃபான் அலியை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து பேசினார். அதிபர் இர்ஃபான் அலி 2023ம் ஆண்டு ஜனவரி 8 முதல் 14ம் தேதி வரை இந்தியாவில் பயணம் மேற்கொண்டு வருகிறார். 17வது வெளிநாடு வாழ் இந்தியர் தின மாநாட்டிலும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டுள்ளார்.

2. எரிசக்தி, உள்கட்டமைப்பு மேம்பாடு, மருந்து உற்பத்தித் துறை, சுகாதாரம், தொழில்நுட்பம் மற்றும் பசுமை கண்டுபிடிப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்டவை குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

3. ஜனாதிபதி இர்ஃபான் அலி, ஜனாதிபதி திருமதி திரௌபதி முர்முவுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்துவார், மேலும் 10 ஜனவரி 2023 அன்று பாராட்டு அமர்வு மற்றும் பிரவாசி பாரதிய சம்மான் விருது வழங்கும் விழாவில் கலந்துகொள்வார். ஜனவரி 11 அன்று இந்தூரில் நடைபெறும் உலகளாவிய முதலீட்டாளர்கள் உச்சி மாநாடு 2023 இல் அவர் பங்கேற்பார்.

4. இந்தூர் தவிர, டெல்லி, கான்பூர், பெங்களூர் மற்றும் மும்பை ஆகிய நகரங்களுக்கும் ஜனாதிபதி அலி செல்லவுள்ளார்.

**இந்தூர்**
**ஜனவரி 09, 2023**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.